2015 செப்டம்பர் 28]

(இ) குளச்சல் தொகுதி, ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏ.வி.எம்., கால்வாய் சகதி நிறைந்து, சாக்கடை போல் காணப்படுவதால் சுகாதாரக் கேடு மற்றும் துர்நாற்றம் உள்ளது. அந்தப் பகுதி மீனவ மக்கள், இஸ்லாமிய மக்கள் மற்றும் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, சகதி போல் உள்ள சாக்கடையைச் சுத்தம் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை என்ற தவறான கருத்தைப் பதிவுசெய்து, வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள். அது தவறு. முறைப்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் துறை வாரியாக வந்த பதிலை இங்கே கணக்கிட்டு, அவற்றின் அடிப்படையில் இங்கு தினந்தோறும் கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பான சில விவரங்களை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 56—ன்கீழ், 48 ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகளும், பேரவை விதி 55—ன்கீழ் பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய சுமார் 300—க்கும் அதிகமான கவன ஈர்ப்பு அறிவிப்புகளும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட சில ஒத்திவைப்புத் தீர்மான